| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>அர்ச்சுனன் | அ.வ.எண்.120/2017 | 17.07.2023 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனக்கு பாதை இருப்பது சர்வே எண்.224/1 எப் என்றாலும், மேற்படி சொத்தின் உரிமையாளரான கந்தசாமி மீது நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அந்த இடம் மாமூல் பாதை கிடையாது. மாமூல் பாதை கிடையாது என்றாலும் மேற்படி மாமூல் பாதை நிலம் ஆக்கிரமிப்பு செய்யும் போது போய்விட்டது என்றாலும் எனக்கு பாதை சர்வே எண்.224/1 எப் ல் தான் உள்ளது என்றாலும் சரியல்ல. சர்வே எண்.224/1 ஜி1 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, உரிமையுள்ளது. வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தில் கண்ட கிழமேல் 3 அடி அகல பாதை தென்வடலாக உள்ளது தற்போது பாதையாகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாதை சர்வீஸ் ரோடாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கிழமேலாக எந்த பாதையும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பாதை இல்லாத காரணத்தினால் தான் வா.சா.ஆ.4 ல் நான்கெல்லையில் மேற்படி பாதை குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பாதை இல்லாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.